சுருக்கம்

நிர்வாகம் – மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனைகளில் பணிபுரியும் இரண்டு ஒப்பந்த மருத்துவ அலுவலர்கள் – ஒப்பந்த அடிப்படையில் ஊதியம் பெற நிதி ஒதுக்கீடு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (இ1) துறை

அரசு ஆணை (பத்தாண்டு ) எண்.267

நாள்:25. 02.2015
திருவள்ளுவர் ஆண்டு 2046
ஜய மாசி – 13

படிக்கப்பட்டது

1. அரசாணை(நிலை)எண்.143, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 30.04.2007
2. அரசாணை நிலை எண்.106, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 20.03.2012
3. அரசாணை(நிலை)எண்.333, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை நாள் 28.09.2004.
4. மருத்துவக் கல்வி இயக்குநரின் கடித எண்.80693/நி1/2/2014, நாள்12.12.2014.

•••••••••

ஆணை

மருத்துவக் கல்வி இயக்குநர், பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் மருத்துவக் கல்வி இயக்கக கட்டுப்பாட்டிலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் சிறப்பு பிரிவுகளில் காலியாக உள்ள பேராசிரியர் (Professor/Reader) பணியிடங்களில் 25% பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் ஒய்வு பெற்ற மருத்துவ அலுவலர்களை வெவ்வேறு தொகுப்பூதியங்களில் நியமிக்க ஆணையிடப்பட்டது எனவும், மேலும், பார்வை 2–ல் படிக்கப்பட்ட அரசாணையில் அத்தொகுப்பூதியங்கள் ஒரே அளவாக ரூ.70,000/– ஆக உயர்த்தப்பட்டது எனவும் கூறியுள்ளார். அவ்வாறே இணைப்பில் குறிப்பிட்டுள்ள இரண்டு மருத்துவர்கள், ஒப்பந்த அடிப்படையில் மாத ஊதியம் ரூ.70,000/– (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) என நிர்ணயிக்கப்பட்டு, பார்வை 3–ல் படிக்கப்பட்ட அரசாணையின் மூலம் மருத்துவக் கல்வி இயக்கக கட்டுப்பாட்டிலுள்ள சென்னை மருத்துவ கல்லூரி மற்றும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிகளில் உள்ள சிறப்பு பிரிவுகளில் (Physical Medicine and Community Medicine) பேராசிரியர்களாக நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருவதாக தெரிவித்துள்ளார்.

2. மேற்காணும் இரண்டு மருத்துவர்கள் தங்களது ஊதியத்தை பெற ஏதுவாக, 2014–2015 ஆம் நிதியாண்டிற்கு ரூ.8,42,337/–ஒதுக்கீடு செய்யுமாறு மருத்துவக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

3. அரசு இக்கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட இணைப்பில் உள்ள இரண்டு பேராசிரியர் பணியிடங்களுக்கு 2014 –2015 ஆம் நிதியாண்டிற்கு ரூ.8,40,155/–(ரூபாய் எட்டு இலட்சத்து நாற்பதாயிரத்து நூற்று ஐம்பத்தைந்து மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் இணைப்பில் கண்ட அப்பணியிடங்களுக்கு எதிரே உள்ள கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை கூடுதல் நிதி 2014–15 ஆம் ஆண்டுக்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி செலவினத்தை மேற்கொள்ள, மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், 2014–2015 ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த மதிப்பீடு நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித் துறைக்கு அனுப்பும்பொழுது இத்தொகையையும் தவறாமல் சேர்த்து அனுப்புமாறு மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.869/சுகாதாரம்II/2015 நாள்:23.02.2015 மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேட்டு எண்.2577(இரண்டாயிரத்து ஐந்நூற்று எழுபத்தேழு) –ல் வழங்கப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. செந்தில்குமார்,
அரசு சிறப்புச் செயலாளர்.

பெறுநர்
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை – 10.
முதல்வர், சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை–600 003.
முதல்வர் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்.
மாநில கணக்காயர் சென்னை –18
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை –01
மாவட்ட கருவூல அலுவலர், தஞ்சாவூர்.
குடிமுறை தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை –9
நகல்
நிதி (சுகாதாரம் II/வ.செ.(பொது)–II/)த் துறை சென்னை–19
இருப்புக் கோப்பு/உதிரிகள்/இணையதளம் /டேட்டா செல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

26/2

பிரிவு அலுவலர்

இணைப்பு

அரசு ஆணை(பத்தாண்டு) எண்.267, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை, நாள் 25.02.2015

| வ. எண். | ஒப்பந்த மருத்துவர்கள் /மருத்துவமனை பெயர் | பணியில் இணைந்த நாள் | கணக்கு தலைப்பு | காலம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | மரு. எஸ்.சம்பத்குமார், பேராசிரியர், உடலியல் மருத்துவம், சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை | 29.09.2014 | 2210– மருத்துவமும் பொது சுகாதாரமும் 05– மருத்துவக் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி 105– ஆங்கில முறை மருத்துவம் I – திட்டத்தில் சேராதது – AA-சென்னை மருத்துவக் கல்லூரி 33 தொழில் முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் –04 ஒப்பந்த ஊதியம் (து.தொ.கு 2210– 05– 105 AA-3342) | 29.09.2014 to 31.03.2015 | 4,24,670 |
| 2. | மரு.கணேசன், பேராசிரியர், கம்னியூட்டி மருத்துவம், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர். | 03.10.2014 | 2210– மருத்துவமும் பொது சுகாதாரமும் 05– மருத்துவக் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி 105– ஆங்கில முறை மருத்துவம் I – திட்டத்தில் சேராதது – AF- தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி தஞ்சாவூர் 33 தொழில் முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் –04 ஒப்பந்த ஊதியம் (து.தொ.கு 2210– 05– 105 AF-3342) | 03.10.2014 to 31.03.2015 | 4,15,485 |
| | | | | மொத்தம் | 8,40,155 |

ப. செந்தில்குமார்,
அரசு சிறப்புச் செயலாளர்.

/உண்மை நகல்/

26/2

பிரிவு அலுவலர்